**கவனிக்க.**- *2008.09.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1569 - 2008 සැප්තැම්බර් 26 වැනි සිකුරාදා - 2008.09.26

*1569 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1044 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1045 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஒற்றோபர் 03 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, செத்தெம்பர் 19 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, ஐப்பசி மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2008, செத்தெம்பர் 3.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொள்ளுப்பிட்டி பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளருக்கான பதவி | மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12. |
| 2. கொழும்பு | இரத்மலானை | இரத்மலானை கல்கிசை பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளருக்கான பதவி | மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12 |
| 3. கொழும்பு | ஹங்வெல்ல | அவிசாவளை நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளருக்கான பதவி | மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12. |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 4. கொழும்பு | கொழும்பு | முகத்துவாரம்-வடக்கு பிரிவின் விவாகப் (பொது) பதிவாளருக்கான பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12. |
| 5. கொழும்பு | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே | கொழும்பு பிரிவின் கோட்டே தெற்குப் பகுதியின் விவாகப் (பொது) பதிவாளருக்கான பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12 |

9- 856

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்துச் செய்தல்

என்னால் இரத்து செய்யப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவின் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தலானது ஏற்கனவே என்னால் பிரசுரிக்கப்பட்டதாகும்.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | வர்த்தமானியின் இலக்கமும், திகதியும் |
|---|---|---|---|
| அனுராதபுரம் | பலகல | கலகம் பலாத பிரிவின் விவாக (கண்டி, பொது) பதிவாளர் பதவி மற்றும் கிரலாவ கோறளை மேற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | வர்த்தமானி இல. 1565 திகதி 29.08.2008 |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

9-989

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திட்ட செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2008

திட்ட செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்குமான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படுமெனவும் இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2008, ஒற்றோபர் 28 எனவும் அபிவிருத்தி அலுவலர்கள் தங்களின் பன்னிரெண்டாவது வருடாந்த சம்பள அளவுத்திட்டத்தையும் கருத்திட்ட அலுவலர்கள் தங்களின் ஏழாவது வருடாந்த சம்பள அளவுத் திட்டத்தையும் அடைவதற்கு முன் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சைத்திட்டம்**.- கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும் :-

(1) பொருளாதார அபிவிருத்தி/திட்டமிடல் - 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள் - பாட இல. 1

(2) சமூக விஞ்ஞானம்/பிராந்திய அபிவிருத்தி - 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள் - பாட இல. 2

**குறிப்பு**-

(அ) ஓர் உத்தியோகத்தர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் சகல பாடங்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

(இ) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

3. **பாடங்கள்**.- (அ) பொருளாதார அபிவிருத்தி/ திட்டமிடல் - 3 மணித்தியாலங்கள்

(1) இலங்கையின் பொருளாதார நிலைமை, கொள்கைகளும் பிரச்சினைகளும்

(2) கருத்திட்ட திட்டமிடல், செயற்படுத்துகை மற்றும் மதிப்பீடு

(3) தகவல் சேகரிப்பு, கோவையிடல் மற்றும் பகுப்பாய்வு.

(ஆ) சமூக விஞ்ஞானம்/பிராந்திய அபிவிருத்தி - 2 மணித்தியாலங்கள்

(1) கிராமிய சமூக விஞ்ஞானம்

(2) இலங்கையின் கிராமிய சமுதாயம்

(3) இலங்கையின் நகர மயமாக்கல்

(4) பிராந்திய அபிவிருத்தி

4. **தகைமைகள்**.- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்தி அலுவலர்களும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களும் தகுதியுடையவராவார்கள்.

5. **விண்ணப்ப முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தின் பிரகாரம், ஒரு A4 அளவுத் தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 1 இல் இருந்து 7 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும், 8 இல் இருந்து மிகுதி விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங் களும் மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். அன்றேல் அவை நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை தன்னுடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்)

(ஆ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 7, பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் 2008, ஒற்றோபர் 28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகவோ அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்குமிடத்து சிங்களம் மற்றும் தமிழ் விண்ணப்பங்களில், விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவை ஆங்கிலத்திலேயே குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) பொருத்தமான வடிவமைப்புக்கு அப்பாற்பட்டதும், எல்லா தகவல்களையும் கொண்டிராததும், பிந்தி வந்தடைகின்ற விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அஞ்சலில் தொலைந்ததாகவோ, தாமதித்ததாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது 4 நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" (தந்தி : பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை) என்ற முகவரிக்கு உடன் காலதாமதமின்றி தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும் போது பின்வரும் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும். இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுகின்றது. சகல பரீட்சார்த்திகளும் அவரினால் வழங்கப்பட்ட விதிகளையும் ஒழுங்குகளையும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பரீட்சைக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்று ஏற்றுகொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சையின் முழுப்பெயர் ;
(iii) முழு அஞ்சல் முகவரி ;
(iv) விண்ணப்பத்தின் புகைப்படப்பரதி :
(v) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி :
(iv) அஞ்சல் அலுவலகத்தின் பெயர், விண்ணப்பப்படிவம் பதிவு செய்யப்பட்ட இலக்கம், திகதி.

7. **ஆளடையாள அட்டை**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் ஒவ்வொரு பாடத்தின் போதும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்டுவர். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை
(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு

மேலே குறிப்பிட்ட ஆவணங்களில் ஏதாவது ஒன்றினை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் எவரையும் நிராகரிக்கும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியிட மிருந்து பின்வரும் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

| பரீட்சைக் கட்டணம் | ரூபா சதம் |
|---|---|
| (அ) முதற் தடவை தோற்றுவதற்கு | இலவசம் |
| (ஆ) முதற் தடவையின் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப் பரீட்சைக்கும் | 200 0 |
| (இ) ஒரு பாடத்திற்கு | 100 0 |

* பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-3-20-13 வருமான தலைப்பிற்கு வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு மாவட்ட/ பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் நன்றாக ஒட்டி விடுதல் வேண்டும். பற்றுச் சீட்டின் போட்டேட கொப்பி பிரதி ஒன்றினை தம்முடன் வைத்தக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

9. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர்கள் மற்றும் பரீட்சை ஆணயாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திணைக்கள/ நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமை விடுதலை வழங்குமாறு திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

10. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இந்த அமைச்சின் தற்றுணிபின்படி முடிவு செய்யப்படும்.

தாரா விஜேதிலக,
செயலாளர்,
திட்ட அமுலாக்கல் அமைச்சு.

திட்ட அமுலாக்கல் அமைச்சு,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**திட்ட செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2008**

SECOND EFFICIENCY BAR EXAMINATION FOR DEVELOPMENT OFFICERS AND PROJECT OFFICERS RECRUITED UNDER THE MINISTRY OF PLAN IMPLEMENTATION - 2008

(**குறிப்பு**- இப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்)

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினை கூட்டில் இடுக)

1. (i) சொந்தப் பெயர் முதலெழுத்துக்களுடன் :- (பெரிய ஆங்கில எழுத்தில்):————.
உ- ம் : SILVA, B.A.

(ii) சொந்தப் பெயர் முதலெழுத்துக்களுடன் (சிங்களத்தில்/ தமிழில்) :————.

(iii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :————.

(iv) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (பெரிய ஆங்கில எழுத்தில்):————.

2. (i) அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :————.

(ii) அலுவலக முகவரி (பெரிய ஆங்கில எழுத்தில்):————.

(இந்த விலாசத்திற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும்)

3. பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4. கருத்திட்ட/அபிவிருத்தி அலுவலராக கடமையேற்ற திகதி : (கடமையைப் பொறுப்பெற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக)

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் கீழ் விண்ணப் பிக்கும் பாடங்கள் :-

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| (i) .............................................. | ☐ |
| (ii) .............................................. | ☐ |

6. நீங்கள் முதல் தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர் களா? :————.

7. முதல் தடவையாக இல்லாவிட்டால், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :————.

> பரீட்சை ஆணயைாளருக்கு 4000-20-03-20-13 வருமான தலைப்பில் வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டிவிடுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை தன்னுடன் வைத்துக் கொள்ளவும்.)

நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற்குறிப்பிட்ட 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும், அத்துடன் இத்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற பரீட்சை தொடர்பான நியதிகள், ஒழுங்குகள், பிரமாணங்களை பின்பற்றுவதாக யான் உறுதி செய்கிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிட அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**9. கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ...................................... எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 2008 ஆம் ஆண்டு .................... மாதம் ........................ ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிபடுத்துகின்றேன்

————,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.

**10. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-**

நான்,

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,
(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும்

சான்றுபடுத்துகின்றேன்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

9-896

**நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு**

*நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவப் பிரிவின் தரம் II இல் உள்ள நிறுவன அபிவிருத்தி அலுவலர்களுக்கான I மற்றும் II ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை – 2008*

நீர்ப்பாசன நீர் முகாமைத்துவப் பிரிவின் தரம் II இல் உள்ள நிறுவன அபிவிருத்தி அலுவலர்களுக்கான I மற்றும் II ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை – 2009 சனவரி மாதம் கொழும்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும்.

2. **I ஆம் தடைகாண் பரீட்சையின் பரீட்சை நடைமுறையும் பாடத்திட்டமும் :**

I ஆம் தடைகாண் பரீட்சையின் பரீட்சை பாடத்திட்டம் பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது :-

(i) (பாட இலக்கம் 01) அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும் - 3 மணித்தியாலங்கள் (இந்த வினாத்தாள் 2 பகுதிகளைக் கொண்டதாகும்)

- மொத்தப் புள்ளிகள் 100

ஒவ்வொரு பகுதியிலும் ஆகக்குறைந்தது 20 புள்ளிகளை யேனும் பெறவேண்டும்.

(ii) (பாட இலக்கம் 02) அரசாங்க நிதிப்பிரமாணக் குறிப்பு - 3 மணித்தியாலங்கள்

- மொத்தப் புள்ளிகள் 100

**குறிப்பு :**

(அ) சகல பாடங்களுக்கும் ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் அலுவலர்களுக்குத் தோற்ற முடியும்.
(ஆ) பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒரு வினாத்தாளில் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

3. **பாடத்திட்டம் :**

(அ) அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும் :

பாகம் I

(1) சம்பளம்
(2) மேலதிகநேரக் கொடுப்பனவு, விடுமுறை நாள் மற்றும் விடுமுறை நாளுக்கான சம்பளமும் கொடுப்பனவும்
(3) லீவு
(4) புகையிரத ஆணைச்சீட்டு
(5) உள்நாட்டு அலுவலகப் பிரயாணம், விடுமுறைப் பயணம்
(6) வாரப் பருவச்சீட்டு
(7) உத்தியோகபூர்வ இல்லம்
(8) சம்பளக் கடனும் முற்பணமும்
(9) கோவைகள் பரிமாற்றல் வழிமுறை

பாகம் II

(10) அலுவலக முறைகளிலுள்ள முக்கியத்துவம்
(11) அலுவலக முறைமை பற்றிய கோட்பாடு
(12) கோவை பேணுதல்
(13) அஞ்சல் தொடர்பான விடயங்கள்
(14) கோவைகளில் குறிப்புகளை எழுதுதல்

(ஆ) நிதிப்பிரமாணக் குறிப்பு :

(1) திரட்டு நிதி, வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல்.
(2) செலவினங்கள் மற்றும் பதிவழித்தல்கள் முதலியன.
(3) பிரதான கணக்குப் பொறுப்பு அதிகாரி, கணக்காளர்கள், வருமானக் கணக்கு அலுவலர்கள் செலுத்தல்களுக்கான அதிகாரத்தை வழங்குதல், அனுமதித்தல், சான்றுப்படுத்தல் மற்றும் பொறுப்புச் சாட்டுதல்
(4) கட்டுநிதியும் வங்கிக் கணக்குகளும்
(5) முற்பணக் கணக்குகள்
(6) வழங்கல் பணியும் சேவையும்
(7) பல விடயங்கள் (நி. பி. கு. 825 முதல் 855 மற்றும் 875 முதல் 893 வரை)

4. **II ஆம் தடைகாண் பரீட்சையின் பரீட்சை நடைமுறையும் பாடத்திட்டமும் :**

II ஆம் தடைகாண் பரீட்சையின் பரீட்சை பாடத்திட்டம் பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது :-

(i) (பாட இலக்கம் 03) - முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் (3 மணித்தியாலங்கள்) - மொத்தப் புள்ளிகள் 100
(ii) (பாட இலக்கம் 04) பாரிய நீர்ப்பாசன கருத்திட்ட முகாமைத்துவம் (3 மணித்தியாலங்கள்) - மொத்தப் புள்ளிகள் 100

**குறிப்பு :**

(அ) இந்த இரண்டு பாடங்களுக்கும் ஒரே தடவையில் தோற்ற முடியும்.
(ஆ) பரீட்சையில் சித்தியடைவதற் ஒரு வினாத்தாளில் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

5. **பாடத்திட்டம் :**

(அ) முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் :

(1) முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் பற்றிய வரலாற்றுப் பரிணாம வளர்ச்சி
(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், பதவிநிலைப்படுத்தல்
(3) மேற்பார்வை, தொடர்பாடல் மற்றும் கட்டுப்பாடு

(ஆ) பாரிய நீர்ப்பாசன கருத்திட்ட முகாமைத்துவம் :

(1) இலங்கையின் நீர்ப்பாசன முகாமைத்துவ வரலாற்றுப் பரிமாண வளர்ச்சி
(2) பங்குபற்றல் முகாமைத்துவப் பிரவேசம்
(3) நீர்ப்பாசன சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் செயற்படுத்துகையில் எழும் பிரச்சினைகள்
(4) நிறுவன அபிவிருத்தி

**கவனிக்க வேண்டியது**.- தேவையாயின் இம்முறை இரண்டு தடைகாண் பரீட்சைகளுக்கும் ஒரே தடவையில் தோற்ற முடியும். அந்த விபரங்களை சரியாக உள்ளிட்டு ஒரு விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிப்பது போதுமானதாகும்.

6. இப்பரீட்சைகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் பொருட்டு மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகளினால் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிகளிலேயே விண்ணப்பப்படிவங்களும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தை பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

விண்ணப்பப்படிவத்தின் விடய இலக்கம் 01 முதல் 07 வரை கடதாசியின் முதல் பக்கத்தில் அடங்கும் வகையிலும், அடுத்து வரும் விடய இலக்கங்கள் அதே கடதாசியின் மறுபக்கத்தில் அடங்கும் வகையிலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதில் உரிய விபரங்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள், அரைகுறையாகப் பூரணப்படுத்தப்பட்டிருக்கும் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பப்படிவங் களைத் தயாரிக்கும்போது அதில் காணப்படும் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள மொழி விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் அவசியமாகும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் இந்த பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை விண்ணப்ப தாரர்கள் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் குறிப்பிட விரும்புகின்றேன்.

முதல் தடவையாக இப்பரீட்சைகளுக்குத் தோற்றும் அலுவலர்கள் இதற்கான பரீட்சைக் கட்டணத்தை செலுத்த அவசியமில்லை. அதன் பின்னர் தோற்றும் தடவைகளில், ஒரு பரீட்சை தொடர்பில் முழுப் பரீட்சைக் கட்டணம் ரூ. 250 ஆகும். ஒரு பரீட்சையில் ஒரு பாடத்திற்குத் தோற்றுவதற்கான பரீட்சைக் கட்டணம் ரூ. 150 ஆகும். தான் தோற்றும் பாடங்களுக்கு உரிய பரீட்சைக் கட்டணத்தை நீர்ப்பாசன முகாமைப் பணிப்பாளரின் டொரிங்டன், இலங்கை வங்கிக் கிளையின் 2323294 எனும் இலக்க வங்கிக் கணக்குக்கு வரவு வைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. மேலும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்தப்பட்டு பெற்ற பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு உறுதியாக ஒட்டப்படுதல் வேண்டும். அந்த பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

7. விண்ணப்பப்படிவத்தை தனது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- பரீட்சை நாள் அன்று பரீட்சை மேற்பார்வை அதிகாரியின் முன்னிலையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளங்களை நிரூபிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் பின்வருவனவற்றில் ஒன்றாகும் :

(1) ஆட்கள் பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

9. இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதால், அவரினால் பரீட்சைகள் நடாத்தல் தொடர்பில் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் ஒழுகி நடக்க வேண்டும். அந்த சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன் அல்லது அவள் ஆளாக நேரிடும்.

10. இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடைய, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை ஒன்று வழங்கப்பட்டிருக்கும் தமது அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்களத் தலைவர்களினால் கடமை லீவு அனுமதிக்கப்படல் வேண்டும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மேற்பார்வை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையாகும். பரீட்சை அனுமதி அட்டை இல்லாத ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி கிடையாது.

11. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதுபற்றிய பத்திரிகை விளம்பரம் ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். விளம்பரம் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் சென்றதன் பின்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை எனின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு தெரிவிக்க வேண்டும். உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பதிவுத்தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன், கொழும்புக்கு வெளிப்பிரதேசம் ஒன்றில் இருந்தாயின், அனுமதி அட்டையை அனுப்பிவைக்கும் பொருட்டு பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு, உங்களின் வேண்டுகோள் கடிதத்தின் பிரதி ஒன்றையும் உங்கம் வசம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவது என்பது அவன் அல்லது அவள் பரீட்சைக்குத் தோற்ற தகுதி பெற்றுள்ளார் என்பதற்கான ஒரு அங்கீகாரம் ஆகும் என கருதப்படல் வேண்டும்.

ஏ. பி. ஆர். ஜயசிங்க,
பணிப்பாளர்,
நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

***நீர்ப்பாசன நீர் முகாமைத்துவப் பிரிவின் தரம் II இல் உள்ள நிறுவன அபிவிருத்தி அலுவலர்களுக்கான I மற்றும் II ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2008***

First and Second Efficiency Bar Examinations for Institutional Development Officers of the Irrigation Management Division - 2008

தோற்றும் பரீட்சை: ☐ (உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐ (உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக) (சிங்களம்-2/தமிழ்-3)

I ஆவது தடைகாண் பரீட்சை - 1
II ஆவது தடைகாண் பரீட்சை - 2
பரீட்சைகள் 2 இற்கும் - 3

1. (அ) முதலெழுத்து இறுதியில் வரும் வகையில் முதலெழுத்துடனான பெயர் (உ-ம் : SILVA, A. B.) :----.
........................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(சிங்களம்/தமிழ்)

2. அலுவலக முகவரி (இந்த முகவரிக்கு பரீட்சை அனுமதி அட்டை தபாலில் அனுப்பி வைக்கப்படும்) :-

ஆங்கிலத்தில் :----.

சிங்களத்தில்/தமிழில் :----.

3 ஆண்/பெண் (பெண்-1, ஆண்-0) ☐
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. பிறந்த திகதி :----.

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. பதவிப் பெயர் :----.

8. தோற்றும் பாடம்/பாடங்கள் :----.

பாட இலக்கம் ☐☐ பாட இலக்கம் ......................................
பாட இலக்கம் ☐☐ பாட இலக்கம் ......................................
பாட இலக்கம் ☐☐ பாட இலக்கம் ......................................
பாட இலக்கம் ☐☐ பாட இலக்கம் ......................................

வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணத்திற்கான உரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு சான்றாக பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு கழறாத வண்ணம் ஒட்டுக.

| இந்த பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும் |
|---|

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
பிரதேச செயலக அலுவலகம் :----.
திகதி :----.
தொகை ரூ. :----.

மேற்படி விபரங்கள் சரியானவை என்றும், மேற்குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவன்/உரித்துடையவள் ஆவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும், பரீட்சை நடாத்தல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு ஒழுகி நடக்கவும் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ்***

மேலே கையொப்பமிடப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி .......................................................................... என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும் அவர் இப்பரீட்சைக்குத் தோற்ற தேவையான தகைமைகளைப் பெற்றுள்ளார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.

திகதி :----.

**கவனிக்கவேண்டியது**.- விடய இலக்கம் 01 முதல் 07 வரை கடதாசியின் முதல் பக்கத்திலும், அடுத்த விடய இலக்கங்கள் கடதாசியின் மறுபக்கத்திலும் அமைதல் வேண்டும்.

9-1016

**உயர் கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

**கைத்தொழில் அபிவிருத்திக்கான வழிகாட்டி**

*உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் 2009 கல்வி ஆண்டுக்காக மாணவர்களை அனுமதித்தல்*

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் [(இ. உ. தொ. க. நி.) (SLIATE) நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 2007 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முதல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த (புதிய/பழைய பாடத்திட்டம்) மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே காணப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை "A" பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு உரிய உயர் தொழில்நுட்ப நிறுவன/பிரிவுக்கு (கொழும்பு) பார்க் வீதி, மக்கள் வங்கிக் கிளை அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் "SLIATE கணக்கு இலக்கம் 0025-100133397613"செலுத்தப்பட்ட ரூ. 250 க்கான ரசீதை இணைத்து பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பாடநெறியை" குறிப்பிடல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை ஒவ்வொன்றுக்கும் தனியாக ரூபா 250 கட்டணத்தைச் செலுத்தி ரசீதுகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்துக்கு மாறாக வேறு இலக்கங்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"அ" பிரிவில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான உயர் தொழில்நுட்ப நிறுவனங்களினதும்/நிறுவனப் பிரிவுகளினதும் முகவரிகளும், நடாத்தப்படும் பாடநெறிகள் தொடர்பான விபரங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், விண்ணப்பதாரிகள் "ஆ" பிரிவில் குறிப்பிடப்படும் பாடநெறிகளை மட்டுமே தகைமை பிரகாரம் தெரிவுசெய்ய வேண்டும்.

**விரிவுரைகள் இடம்பெறும் முறைமை :**

காலை/முழுநேரக் கற்கைநெறி : கிழமை நாட்களில் பகல் நேரங்களில்
பகுதி நேர கற்கைநெறி : வார இறுதி நாட்களில் பகல் நேரங்களில்
(பகுதி நேர கற்கை நெறிகள் உரிய துறையில் தொழில் புரிவோருக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)

**கற்கை நெறிகளுக்கான கட்டணங்கள்**.- பகல் நேர பாடநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அரை வருட காலத்துக்கான உயர் தேசிய டிப்ளோமா ஆங்கில பகுதி நேர மாணவர்களுக்கான பாடநெறிக் கட்டணம் ரூபா இரண்டாயிரம் (ரூ. 2,000) 1 ஆம் 2 ஆம் வருட உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பகுதி நேர மாணவர்களுக்கான கட்டணம் இரண்டாயிரம் (ரூ. 2,000) அரையாண்டுக்கான 3 ஆம், 4 ஆம் வருட உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பகுதி நேர மாணவர்களுக்கான கட்டணம் ரூபா மூவாயிரம் (ரூ. 3,000) இது வருடாந்தம் மாற்றப்படக்கூடியது. (ஒரு வருடத்துக்கு இரண்டு தவணைகள்)

**நேர்முகப் பரீட்சை**.- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டோர் தேர்வுப் பரீட்சை அத்துடன்/அல்லது நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். க. பொ. த. (உ./த.) இல் பெற்றுக்கொள்ளப்பட்ட Z ஸ்கோர் அல்லது புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இது தொடர்பான திகதி, நேரம், இடம், சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் போன்ற விபரங்கள் எழுத்துமூலம் அறிவிக்கப்படும். மூலப்பிரதி இல்லாத பட்சத்தில் மூலப் பிரதிகள் மாணவப் பதிவின்போது சமர்ப்பிக்கப்படும் என்ற அடிப்படையில் அதன் பிரதி ஏற்றுக்கொள்ளப்படும்.

**விடுதி வசதிகள்**.- நைவில/தெஹிவளை உ. தொ. நி. (ATI) இல் பெண் பிள்ளைகளுக்கும், அம்பாறை ஹார்டி உ. தொ. நி (ATI) இல் பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் குறிப்பிட்ட இடவசதிகளே உள்ளன. இந்த வசதிகள் முழுநேர மாணவர்களுக்கு மட்டுமேயாகும். நிறுவனத்துக்கு மாணவர்களின் வீட்டுக்கும் இடையில் உள்ள தூரத்தின் அடிப்படையிலேயே இது நிர்ணயிக்கப்படும்.

**பகுதி "அ"**

உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின்/உயர் தொழில்நுட்ப நிறுவனப் பகுதிகளின் குறியீட்டிலக்கங்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் கீழே தரப்பட் டுள்ளன :-

| குறியீட்டு இல. | உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் / உ. தொ. நி. பகுதிகளின் பெயர்கள் | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|---|
| 01 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், தெஹிவளை | வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2738349 |
| 02 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், காலி | களுவெல்ல, காலி | 091-2223774 |
| 03 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், கண்டி | இல. 16, கெப்பட்டிபொல வீதி, கண்டி | 081-2226644 |

| குறியீட்டு இல. | உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் / உ. தொ. நி. பகுதிகளின் பெயர்கள் | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|---|
| 04 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், குருநாகல் | இல. 22/1, வெலிகொட வீதி, குருநாகல் | 037-2224911 |
| 05 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், பதுளை | கிறீன்லண்ட் ஒழுங்கை, பதுளை | 055-2230218 |
| 06 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் | இல. 78, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் | 021-2222595 |
| 07 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், நய்வலை | நய்வலை, எஸ்ஸல்ல, வேயன்கொடை | 033-2292544 |
| 08 | ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனம், அம்பாறை | இன்கினியாகலை வீதி, அம்பாறை | 063-2222056 |
| 09 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், திருகோணமலை | கிண்ணியா வீதி, வறோதயா நகர், திருகோணமலை | 026-2223232 |
| 10 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், லபுதுவை | சிரிதம்ம மாவத்தை, லபுதுவை, அக்மீமனை | 091-2246180 |
| 11 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, அநுராதபுரம் | தொழில்நுட்பக் கல்லூரி, புதிய நகர், அநுராதபுரம் | 025-2234417 |
| 12 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, வரக்காபொல | தொழில்நுட்பக் கல்லூரி, அம்பகல வீதி, வரக்காபொல | 035-2267651 |
| 13 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, இரத்தினபுரி | தொழில்நுட்பக் கல்லூரி, கொழும்பு வீதி, இரத்தினபுரி | 045-2232390 |
| 14 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, சம்மாந்துறை | மெயின் வீதி, சம்மாந்துறை | 067-2261304 |
| 15 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, மட்டக்களப்பு | தொழில்நுட்பக் கல்லூரி, மஞ்சத்தொடுவாய், மட்டக்களப்பு | 065-2247519 |

(2009, சனவரி தொடக்கம் வரக்காபொலை இ. தொ. நி. (ATI) பிரிவு கேகாலைக்கு மாற்றப்படும்.)

இரத்தினபுரி இ. தொ. நி. (ATI) பிரிவு 2009, சனவரி மாதம் மாற்றப்படும்.

**பாடநெறிகளின் பெயர்களும் நிறுவனங்களின் குறியீட்டு இலக்கங்களும்**

| பாடநெறியின் பெயர் | காலம் | நடாத்தப்படும் பாட நெறிகளுக்கான நிறுவன குறியீட்டு இலக்கங்கள் |
|---|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ. தே. க. டி./HNDA) பகல்/முழுநேரம் | 4 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 9, 12, 11, 14, 15 |
| 1.1 உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ. தே. க. டி./HNDA) பகுதி நேரம் | 4 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 9, 11, 12, 13, 14, 15 |
| 2. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (உ. தே. மு. டி./HNDM) காலை/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடம் | 1, 2, 3, 5, 6 |
| 3. உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (உ. தே. த. தொ. டி./HNDIT) காலை/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 1/2 வருடம் | 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 |
| 4. உயர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா – விவசாயம் (உ. தே. தொ. டி./HNDT) காலை/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடம் | 7, 8, 10 |
| 5. உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (உ. தே. ஆ. டி./ HND English) காலை/முழுநேரம் | 2 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 8 |
| 5.1 உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (உ. தே. ஆ. டி./ HND English) பகுதி நேரம் | 2 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 11, 12, 14, 15 |
| 6. உயர் தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா (உ. தே. வி. க. டி. HNDBS) காலை/முழுநேரம் (ஆங்கிலம்) | 3 வருடம் | 1, 2, 3, 5, 6 |
| 7. தேசிய வியாபார நிதி டிப்ளோமா (தே. வி. நி. டி./NDBF) காலை/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 வருடம் | 1 |

**குறிப்பு :**

1. சகல பாடநெறிகளின் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படும். மீளாய்வு செய்யப்பட்ட சில பாடநெறிகள் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பமாகும். அத்துடன் இப்பாடநெறிகளின் காலம் மாறலாம்.

2. முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா வின் (காலை/முழுநேரம்) மொழி மூலமானது வார நாட்களில் சிங்களம் அல்லது தமிழில் நடாத்தப்படும். மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் ஆங்கில மொழி மூலமும் மற்றும் அவை வார இறுதி நாட்களில் நடைபெறும்.

3. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (காலை/முழுநேரம்) பாடநெறியின் முதலாம் மற்றும் 2 ஆம் ஆண்டு வார நாட்களில் காலை வேளையில் நடாத்தப்படும். மேலும் 3 ஆம் மற்றும் இறுதியாண்டானது வார இறுதி நாட்களில் நடாத்தப்படும்.

4. க. பொ. த. (உ. த.) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் தகைமையடைந்த விண்ணப்பதாரிகள் பொதுப் பரீட்சை தாளில் ஒரு சித்தியைப் பெற்றிருத்தல் அவசியம்.

5. க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பெற்ற Z Score அல்லது சராசரி புள்ளிகளின் அடிப்படையிலேயே தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

6. தகைமை பரீட்சையில் பாடத்தில் அல்லது பாடநெறிக்கு சம்பந்தமான துறையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

7. காலை நேர பாடநெறிகளுக்காக 22 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   எந்தவொரு இலங்கை பல்கலைக்கழக/இணைந்த பல்கலைக்கழக கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, கல்விக் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அல்லது ஏனைய மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒரு உள்ளக மாணவராக பாடநெறியொன்றை பின்பற்றுபவர்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் ஒரு காலை/முழுநேர மாணவனாக பதிவுசெய்துகொள்ள முடியாது. சொல்லப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்துள்ள ஏதேனும் நிறுவனங்களில் முழுநேர பாடநெறிகளை ஏதும் மாணவரொருவர் மேற்கொள்வது தெரியவரின் அவர்களின் பதிவுகள் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இரத்துச் செய்யப்படும்.

8. குறிப்பிட்ட இ. தொ. நி. அல்லது இ. தொ. நி. பகுதிக்கு முழுநேர பாடநெறிக்காக தெரிவுசெய்யப்பட்ட பின்பு எக்காரணம் கொண்டும் வேறும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் எந்தவொரு மாணவரும் மாற்றம் செய்யப்பட மாட்டார்.

**பகுதி "ஆ"**

மேற்கூறப்பட்ட கற்கைநெறிகளுக்கான தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன :

1. **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - உ. தே. க. டி. (காலை/முழுநேரம்).- விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :**

   (i) தூயகணிதம் அல்லது கணக்கியலுடன் ஒரே முறையில் ஆகக்குறைந்தது நான்கு பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) சித்திபெற்றிருத்தல், தூயகணிதம் அல்லது கணக்கியலில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருக்காவிடில் க. பொ. த. (சா. த.) இல் இப்பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் கருத்திற்கொள்ளப்படும்.

   க. பொ. த. (உ. த.) இல் தூயகணிதம் அல்லது கணக்கியல் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருக்காவிடில் க. பொ. த. (சா. த.) இல் கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

   அல்லது

   (ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் மூன்று பாடங்களில், இணைந்த கணிதம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருக்க வேண்டும்.

   இம்மூன்று பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.

   க. பொ. த. (உ. த.) இல் இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்காவிடில் க. பொ. த. (சா. த.) இல் கணித பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.

   அல்லது

(iii) தொழிற் கல்வி பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

க. பொ. த. (உ. த.) பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் பெற்ற ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெறும்.

1.1 **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - உ. தே. க. டி. (பகுதி நேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்ற பட்டம் அல்லது இடைநிலைப் பரீட்சை
(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டத்தில்)/மூன்று பாடங்கள் (புதிய பாடத்திட்டத்தில்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ்.
(iv) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் வர்த்தகக் கல்வி தொடர்பான தேசிய சான்றிதழ் (கணக்கியல்) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் கணக்கியல் தொடர்பான தேசிய சான்றிதழ்.

**குறிப்பு** :

(அ) தொழில் அனுபவம்.- விண்ணப்பதாரிகள் பொருத்தமான அரச நிறுவனம் ஒன்றில்/பொது நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வரும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் முதலாம் வருடத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு இக்கற்கை நெறியின் இரண்டாம் வருடத்திற்கு, ஏனைய அனுமதித் தகைமைகளைப் பூர்த்திசெய்து, இடமிருப்பின் அனுமதிக்கப்படுவர் :-

(1) வியாபார கற்கை/நிதி தொடர்பான தேசிய டிப்ளோமா
(2) உயர் தேசிய வர்த்தக/முகாமைத்துவ டிப்ளோமா, இரண்டாம் ஆண்டு
(3) விஞ்ஞானமாணி (வியாபார நிர்வாகம்)
(4) வணிகமாணி
(5) விஞ்ஞானமாணி (கணக்கியல்)
(6) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) 1 ஆம், 2 ஆம் பகுதி
(7) பட்டயக் கணக்காளர், கணக்கியல் நிறுவனத்தின் (CIMA) 1 ஆம், 2 ஆம் பகுதி
(8) இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் (AAT) 3 ஆம் கட்டப் பகுதி.

2. **தேசிய உயர் முகாமைத்துவ டிப்ளோமா - தே. மு. டி. (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) நான்கு பாடங்களிலும்/க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் மூன்று பாடங்களிலும், க. பொ. த. (சா. த.) இல் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரணச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் அல்லது வியாபார கற்றை நெறிக்கான தேசிய சான்றிதழ் (பொது நிர்வாகம்/சந்தைப்படுத்தல்) அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா - (உ. தே. த. தொ. டி.) (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iv) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

(v) க. பொ. த. (சா. த.) இல் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

* 1995 புதிய பாடத்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படும் க. பொ. த. (உ. த.) விவசாய விஞ்ஞானம்.

4. **உயர் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (உ. தே. தொ. டி.) (விவசாயம்) (பகல்/முழுநேரம்)**.- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் ,

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே முறையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், விலங்கியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அத்துடன்

(iii) க. பொ. த. (சா. த.) இல் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

5. **தேசிய உயர் ஆங்கில டிப்ளோமா** (HND in-English) **(பகல்/பகுதி நேரம்)**.- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) இல் ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி

(ii) க. பொ. த. (உ. த.) இல் மூன்று பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) இல் ஆங்கில இலக்கியத்தில் சித்தியும் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியும்

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல், க. பொ. த. (சா. த.) இல் ஆங்கில மொழியில் விசேட சித்தியடைந்திருத்தல் (A அல்லது B)

(iv) ஆங்கில சிறப்பு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரியர்களுக்கான கல்விக் கல்லூரி டிப்ளோமா

(v) க. பொ. த. (உ. த.) இல் மூன்று பாடங்களில் சித்தியுடன் தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தகக் கைத்தொழிலும் மேலதிகக் கல்வியும் தொடர்பான ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

6. **தேசிய உயர் வர்த்தக கல்வி டிப்ளோமா (பகல்/முழுநேரம்)**.- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகமும் நிதியியலும், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் அதே பரீட்சையில் அரசியல் விஞ்ஞானம், தூயகணிதம், புவியியல், சிங்களம், தமிழ், ஆங்கிலம், தர்க்க சாஸ்திரம், சரித்திரம், வியாபாரக் கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகக் கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது க. பொ. த. (உ. த.) இல் மேலுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் புவியியல், மனையியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்க சாஸ்திரமும் விஞ்ஞானமும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், வியாபார கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) இல் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சாதாரண சித்தி.

7. **வர்த்தகமும் நிதியியலுமான தேசிய டிப்ளோமா – வ. நி. தே. டி. (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகம் மற்றும் நிதி, கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் ஒரே முறையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

(ii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) இல் பொருளியல், வர்த்தகக் கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிட்டுள்ள பாடங்களில் இரண்டு பாடங்களிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒரு பாடத்திலும் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புவியியல், மனைப் பொருளியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்கசாஸ்திரமும் விஞ்ஞானமும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம்.

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ்.

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

**குறிப்பு** :

(1) யாழ்ப்பாணம், திருகோணமலை, சம்மாந்துறை மற்றும் மட்டக்களப்பு, தெஹிவளை ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் நடாத்தப்படும் பகுதிநேர பாடநெறிகள் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.

(2) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட (சாதாரண சித்தி) வர்த்தக பட்டப்படிப்புக்கு சமனான 1990, ஒற்றோபர் 30, 46/90 சுற்றுநிரூபத்தால் செல்லுபடியாக்கப்பட்ட கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்

(3) தெஹிவளை மற்றும் கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் கணக்கியல் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பகுதி நேர பாடநெறிகள் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகள் மூலம் நடத்தப்படும்.

(4) உங்கள் தகுதி அடிப்படையில் உங்களால் குறிப்பிடப்படும் கல்வித் திட்டங்களுக்கான தெரிவுகள் பிரவேசங்களுக்காக ஆலோசிக்கப்படும்.

கல்வியாண்டு - 2009 க்கு உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்/பிரிவுகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் சம்பந்தமாக இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் (SLIATE) பணிப்பாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியானதென்பதை தயவுசெய்து கவனிக்கவும்.

இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 17.10.2008.

எச். டி. கமல் பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
இல. 18/2, வோட் பிளேஸ்,
கொழும்பு 7.
Web Site : www.sliate.net

*Office use only* | Course Number ..........................................

*SPECIMEN APPLICATION FORM*

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

***Application Form for Admission to Higher National Diploma/National Diploma Course***

Name of the Institute/Institute Section :........................................................

| *Name of the Course* | *Order of Preference* | *Medium* |
|---|---|---|
| 1 ............................ | .......................................... | ................................ |
| 2 ............................ | .......................................... | ................................ |
| 3 ............................ | .......................................... | ................................ |

1. Name with initials :.....................................................................................................
2. Name/Names denoted by Initials :.....................................................................................................
.............................................................................................. ..........................................................................................................
3. Address :......................................................................................................................................................................................
......................................................................................................................................................................................................
4. Date of Birth :

Year ............................. Month ........................................ Date ........................................
Age (as at 01.01.2009) : Years ............................. Months ........................................ Days ........................................

5. National Identity Card No. :....................................................................................................

6. Sex : Male/Female

7. Administrative District :....................................................................................................

8. (i) Results of GCE (A/L) Examination (In or Before 2007)
Year : ...................................... Index No. :...................................... Medium :......................................

| *Pass Subject* | *Grade* |
|---|---|
| 1. ...................................... | ...................................... |
| 2. ...................................... | ...................................... |
| 3. ...................................... | ...................................... |
| 4. ...................................... | ...................................... |

If under New Syllabus, indicate pass or fail in the General Paper :......................................
Agregate/Average Marks or Z-Score of the above examination, issued by the Department of Examinations :..............................

(ii) Results of GCE (O/L) Examination
Year : ...................................... Index No. :...................................... Medium :......................................

| *Subject* | *Grade* | *Subject* | *Grade* |
|---|---|---|---|
| 1. ...................................... | ...................................... | 6. ...................................... | ...................................... |
| 2. ...................................... | ...................................... | 7. ...................................... | ...................................... |
| 3. ...................................... | ...................................... | 8. ...................................... | ...................................... |
| 4. ...................................... | ...................................... | 9. ...................................... | ...................................... |
| 5. ...................................... | ...................................... | 10. ...................................... | ...................................... |

9. Highest Qualification in English as a subject : ......................................

10. Details of Occupation :......................................: Date of Appointment :......................................
(only for part-time/week-end courses)

Post :......................................
E. P. F. Number :......................................
Place of Work and Address :......................................

I hereby declare that I am not following any other full-time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full-time course at any other state institution. I hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

......................................,
Signature of Applicant.

Date :......................................

(The Bank receipt for Rs. 250/= payable to SLIATE should be annexed)

**வெளிநாட்டு நிதி உதவி பெற்ற திட்டங்கள்**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)

*TRP குவைத் திட்டம்*
*2007-2009*

அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல் :

1. உ. தொ. நி. (ATI) – யாழ்ப்பாணம் மூன்று மாடி கட்டிடம்
2. உ. தொ. நி. (ATI) – திருகோணமலை மூன்று மாடிக் கட்டிடம்
3. உ. தொ. நி. (ATI) – லபுதுவ – ஊழியர் விடுதிகள்
4. உ. தொ. நி. (ATI) – அம்பாறை 4 மாடி கல்வி கட்டிடம், உத்தியோகத்தர் விடுதிகள்
5. உ. தொ. நி. (ATI) – காலி லபுதுவ ATI க்கு 4 மாடி கட்டிடம்
6. உ. தொ. நி. ATI - ஹார்டி/அம்பாறை மற்றும் உ. தொ. நி. (ATI) லபுதுவைக்கு விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள்

*ADB திட்டம்*
*2008-2011*

1. ADB திட்டத்தின்கீழ் பிரதான பிரிவுகள் :

1. புதிய பாடத்திட்ட அபிவிருத்தி சொப்ட்வெயார் பொறியியல் உணவு தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு மீன் வளர்ப்பு தோட்டக்கலை
2. மொழி/IT ஆய்வுகூடம் ஒவ்வொரு உ. தொ. நி. (ATII) கல்வி நிறுவனத்துக்கும்
3. ஒவ்வொரு உ. தொ. நி. (ATII) கல்வி நிறுவனத்துக்கும் முகாமை தகவல் முறை
4. கல்வி ஊழியர்கள் மற்றும் கல்வி யல்லாத ஊழியர்களின் கொள்ளளவு அபிவிருத்தி

*IRQUE திட்டம்*
*2008-2009*
*(உலக வங்கி)*

1. கைத்தொழில் தேவைகளுக்கு உகந்த டிப்ளோமா பாடநெறிகளை மேம்படுத்தல்

HNDA, HNDM, HND ஆங்கிலத்தில் HNDIT, HNDT (விவசாயம்), HNDBS NDBF

2. மேற்கண்ட கல்வி திட்டத்திற்கு புதிய மீள் மதிப்பீட்டு முறைகள்
3. இ. உ. தொ. க. நி. (SLIATE) மாணவர்களுக்கு கொள்ளளவு அபிவிருத்தி திட்டத்தை அறிமுகப் படுத்தல்
4. ஒவ்வொரு உ. தொ. நி. (ATI) கல்வி நிறுவனத்துக்கும் முழுமையான ஓடியோ விசுவல் வகுப்பறைகளை நிறுவுதல்
5. கல்வி ஊழியர்கள் மற்றும் கல்வி யல்லாத ஊழியர்களின் கொள்ளளவு அபிவிருத்தி

**விசேட குறிப்புக்கள் :**

* உ. தே. க. டி/HNDA – விசேடமாக கணனி அடிப்படையிலான கணக்கியல் முறையை அறிமுகப்படுத்துவதற்கு வார நாட்களிலும் - வார இறுதி நாட்களிலும்
* உ. தே. மு. டி/HNDM – சந்தைப்படுத்தல் மற்றும் மனிதவள அபிவிருத்திக்கு புதிய தெரிவுகளை அறிமுகப்படுத்துகிறது.
* உ. தே. த. தொ. டி/HNDIT – அதிகமான கைத்தொழில் தேவைகளுக்கு முகம் கொடுக்க புதிய பாடங்களை அறிமுகப்படுத்துகிறது.

**தென் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட (சலுகை) விலக்குகள்**

வர்த்தக நிர்வாக பட்டப்படிப்புக்கான 4 வருட HNDA மற்றும் HNDM (இ உ. தொ. க. நி/SLIATE) ஆல் நடத்தப்படுவது) பாடநெறிகளுக்கு தென் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட விலக்கை வழங்கியுள்ளது.

(1) கணக்காய்வில் உயர் தேசிய டிப்ளோமா – விலக்கு 1.5 வருடம்
(2) முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா – விலக்கு 1 வருடம்

9-1098